நகர் மன்ற கூட்டத்தில் 68 தீர்மானம் நிறைவேற்றம்

பல்லடம் நகர் மன்றக் கூட்டம் நகராட்சி தலைவர் கவிதாமணி ராஜேந்திரகுமார் தலைமையில் மன்ற கூட்டரங்கில் நடைபெற்றது.

பல்லடம், மே 3: பல்லடம் நகர் மன்றக் கூட்டம் நகராட்சி தலைவர் கவிதாமணி ராஜேந்திரகுமார் தலைமையில் மன்றக் கூட்டரங்கில் நடைபெற்றது. இதில், நகராட்சி ஆணையாளர் மனோகரன், கவுன்சிலர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில், மேற்கு கல்லம்பாளையம், நாரணாபுரம், தெற்குபாளையம், பச்சாபாளையம், பனப்பாளையம், மாணிக்காபுரம் சாலை, கொசவம்பாளையம் சாலை மற்றும் நூலகம் அருகில், பனப்பாளையம் மயானம் அருகில், ஆதிதிராவிடர் குடியிருப்பு, சித்தம்பலம் சாலை ஆகிய இடங்களில் கழிப்பிடம் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் உள்பட 68 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

சிலம்பம் சுற்றி உலக சாதனை நிகழ்ச்சி

பல்லடம் அருகேயுள்ள கேத்தனூரில் திருப்பூர் எம்கே சிலம்பம் அகாடமி, கேத்தனூர் நம் கை சிலம்பம் பயிற்சி பள்ளி ஆகியவை சார்பில் 102ம் ஆண்டு மே தினத்தையொட்டி 102 நிமிடங்கள் இடைநில்லா சிலம்பம் சுற்றி நோபல் உலக சாதனை நிகழ்ச்சி அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நேற்று நடந்தது.

அரசு ஆவணங்களில் காலனி அகற்றம்

தமிழ்நாடு முதல்வருக்கு நன்றி தெரிவித்து ஆதித்தமிழர் ஜனநாயக பேரவை தீர்மானம்

பவுத்தன்.

தாராபுரம், மே 3: திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் ஆதித்தமிழர் ஜனநாயக பேரவையின் நிறுவனத் தலைவர் பவுத்தன் தங்களது அமைப்பின் சார்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மான நகலை, தமிழ்நாடு முதலமைச்சருக்கும் துணை முதலமைச்சருக்கும் அனுப்பி உள்ளார். அதில் கூறியிருப்பதாவது: தமிழ்நாட்டில் ஆதி குடிகளை இழிவு படுத்தும் காலனி என்ற சொல்லை அடையாளப்படுத்தி பதிவிடப்பட்டு வந்தது. சாதிய தீண்டாமை செயல்களை குறியீடு செய்யும் இச்சொல்லை அரசு ஆவணங்களில் இருந்து நீக்க நடவடிக்கை மேற்கொண்ட முதலமைச்சருக்கு ஆதித்தமிழர் ஜனநாயக பேரவை மற்றும் அனைத்து சார்பு அமைப்புகளின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

தனியார் நிறுவனங்கள் சிறு குறு கடன் வழங்கும் நிறுவனங்களில் ஏழை மக்களிடம் கட்டாயமாக கடன் வசூலிக்கும் செயலில் ஈடுபடுபவருக்கு 5 ஆண்டு சிறை தண்டனை வழங்க வகை செய்யும் சட்ட மசோதாவை சட்ட மன்றத்தில் தாக்கல் செய்த துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கும் நன்றி தெரிவித்து கொள்கிறோம். வரும் காலங்களில் பட்டியலின மக்களின் நலன் காக்கும் தமிழ்நாடு அரசுக்கும், திமுகவிற்கும் என்றும் ஆதரவு அளிப்போம். இவ்வாறு அதில் கூறப்பட்டது.

போராட்டம் தொடர்பாக

கனிமொழி எம்பி இல்லத்தில் ஆலோசனை

கனிமொழி எம்பியுடன், செல்வராஜ் எம்எல்ஏ ஆலோசனை மேற்கொண்டார்.

திருப்பூர், மே. 3: ஷாகின்பாத் போராட்ட குழு மற்றும் அனைத்து இஸ்லாமிய குழு சார்பாக, வக்பு திருத்த சட்டத்தை எதிர்ப்பு போராட்டங்கள் நடைபெறுகிறது. இந்த போராட்டத்தில் நாளை (ஞாயிற்றுக்கிழமை) மாலை திருப்பூர் யூனியன் மில் ரோட்டில் போராட்டம் நடைபெறுகிறது. இதில் திமுக துணை பொதுச்செயலாளர் கனிமொழி எம்பி கலந்துகொண்டு பேசுகிறார். இது தொடர்பாக சென்னையில் அவரது இல்லத்தில் திருப்பூர் திமுக மத்திய மாவட்ட செயலாளர் செல்வராஜ் எம்எல்ஏ கனிமொழி எம்பியுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

அடகு வைத்த நகையை வழங்க மறுப்பு

வங்கி முன்பு தம்பதி உண்ணாவிரதம்

திருப்பூர்-தாராபுரம் ரோட்டில் உள்ள வங்கியின் முன் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்ட தம்பதி.

திருப்பூர், மே 3: திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம் ஜோத்தம்பட்டியை சேர்ந்தவர் தாமோதரன். இவர், தனது மனைவியுடன் நேற்று காலை திருப்பூர் தாராபுரம் ரோட்டில் உள்ள ஒரு வங்கியின் மண்டல அலுவலகம் முன் திடீர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டார். சம்பவம் பற்றி அறிந்ததும் தெற்கு போலீசார் விரைந்து வந்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

அப்போது தாமோதரன் கூறியதாவது: பெயிண்ட் கடை வைக்க ரூ.5 லட்சம் தொழில்கடனை ஜோத்தம்பட்டியில் உள்ள வங்கியில் வாங்கினேன். பக்கத்து கடைக்காரரான பாரதி அந்த வங்கியில் தொழில் கடன் வாங்கினார். அவருக்காக நான் சாட்சி கையெழுத்து போட்டேன். கடந்த ஆண்டு பாரதி இறந்து விட்டார். இதனால், பாரதிக்கு ஜாமீன் கையெழுத்து போட்டதாக கூறி என்னிடம் ரூ.3.50 லட்சம் கடனை கட்டுமாறு வங்கியில் கூறினார்கள்.

மேலும், வங்கியில் 10 பவுன் நகையை வைத்து நான் கடன் வாங்கியிருந்தேன். நகைக்கடனுக்கான பணத்தை முழுவதுமாக செலுத்திய பிறகும் எனது நகையை என்னிடம் கொடுக்க மறுக்கிறார்கள். எனது நகையை திருப்பிக்கொடுக்க வேண்டும். ஜாமீன் கையெழுத்தில் இருந்து என்னை விடுவிக்க வேண்டும் என்று கூறியும் கேட்கவில்லை. இதனால், மண்டல அலுவலகத்தில் வந்து முறையிட்டேன். அவர்கள் நகையை கொடுத்துவிடுவார்கள் என்றனர்.

எழுத்துப்பூர்வமாக கடிதம் வாங்கி வந்ததால் தான் நகையை கொடுப்பதாக வங்கியில் தெரிவிக்கிறார்கள். இங்கு கடிதம் கொடுக்கவில்லை. இதைக் கண்டித்து உண்ணாவிரதத்தில் ஈடுபட்டோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

கொளுத்திய வெயிலும், மாலையில் மழை பெய்தபோதும் சாலையோரம் இந்த தம்பதி உண்ணாவிரதம் இருந்தனர். பின்னர், தெற்கு போலீசார் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். ஜோத்தம்பட்டி வங்கியில் இருந்து நகையை தாமோதரனிடம் கொடுப்பதாக போலீசார் கூறியதால் மாலை 6 மணிக்கு உண்ணாவிரதத்தை கைவிட்டு தம்பதி புறப்பட்டனர்.

வெள்ளக்கோவில் நகராட்சியில்

ஒரே நாளில் ரூ.1.10 கோடி வரி வசூல் செய்து சாதனை

அதிகாரிகளுக்கு பாராட்டு

வெள்ளக்கோவில், மே 3: தமிழ்நாட்டில் 134 நகராட்சிகள் உள்ளது. இந்நிலையில் திமுக அரசு மக்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை செய்து வருகிறது. மேலும், தமிழக அரசு பொதுமக்கள் நகராட்சிகளுக்கு செலுத்த வேண்டிய வரி இனங்கள் உரிய காலத்தில் செலுத்துபவர்களுக்கு 5 சதவீதம் ஊக்கத் தொகை வழங்கப்படும் என அறிவித்து இருந்தது.

இதை கருத்தில் கொண்டு வெள்ளக்கோவில் நகராட்சி ஆய்வாளர் குருசாமி வருவாய் உதவியாளர் துறை முருகானந்தன் ஆகியோர் இந்த தகவலை பொதுமக்கள் இடையே கொண்டு சென்றனர்.

இதையடுத்து ஒரே நாளில் ரூ.1 கோடியே 10 லட்சம் வரி வசூல் செய்தனர். வெள்ளக்கோவில் நகராட்சி வரி வருவாயில் 23 சதவீதம் வரி வசூல் செய்து தரவரிசை பட்டியலில் தமிழகத்தில் முதலிடத்தை பிடித்துள்ளது. இசந்த சாதனையை செய்து உதவிய பொதுமக்களுக்கும் நன்றியும் வசூல் செய்த ஆய்வாளர் மற்றும் உதவியாளர்களுக்கு நகராட்சி தலைவர் கனியாரசி முத்துக்குமார், கமிஷனர் வெங்கடேசன் ஆகியோர் பாராட்டுக்களையும் வாழ்த்துகளையும் தெரிவித்தனர்.

துங்காவியில் குடிநீர் கேட்டு போராட்டம்

உடுமலை, மே 3: மடத்துக்குளம் ஒன்றியம் துங்காவி ஊராட்சிக்கு திருமூர்த்தி அணையை ஆதாரமாகக் கொண்ட கூட்டுக்குடிநீர் திட்டத்தின் வாயிலாக குடிநீர் வினியோகிக்கப்படுகிறது.

நீரேற்று நிலையத்தில் பழுது உள்ளிட்ட காரணங்களால், துங்காவி ஊராட்சிக்குட்பட்ட கிராமங்களில், குடிநீர் தட்டுப்பாடு அதிகரித்துள்ளது. இரு வாரங்களுக்கு ஒரு முறை குறைந்த அளவு குடிநீர் கிடைக்கிறது. கடந்த சில வாரங்களாக, இந்த நீரும் வினியோகிக்கப்படவில்லை. இதனால், ஆவேசமடைந்த மக்கள், நேற்று துங்காவி-பூளவாடி ரோட்டில் போராட்டத்தில் ஈடுபட்டனர். சம்பவ இடத்துக்கு கணியூர் போலீசார் வந்து பேச்சுவார்த்தை நடத்தினர். ஒன்றிய, குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தி, பிரச்னைக்கு தீர்வு காணப்படும் என போலீசார் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, மக்கள் போராட்டத்தை கைவிட்டனர்.

பொது அறிவிப்பு

ICICI Bank

பதிவு அலுவலகம்: ஐசிஐசிஐ வங்கி டவர்ஸ், சக்தி சர்க்கிள் அருகில், பழைய பாத்ரா சாலை, வதோதரா 390 007. கார்ப்பரேட் அலுவலகம்: ஐசிஐசிஐ வங்கி டவர்ஸ், பாந்த்ரா-குர்லா வளாகம், மும்பை 400 051.

தங்கநகை மின்-ஏலம் மற்றும் வரவேற்பு அறிவிக்கை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள் ஐசிஐசிஐ வங்கி லிமிடெட் ... மே 14, 2025 நாளில் நடத்தும் ... https://gold.samil.in ... மதியம் 12.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணிக்குள் நடைபெறும். [illegible]

கடன் கணக்கு எண்	வாடிக்கையாளர் பெயர்
418662002987	[illegible]
065962008311	[illegible]
039862004754	[illegible]
602562063604	[illegible]
613662073918	[illegible]
038562007579	[illegible]
404962005404	[illegible]
035462003176	[illegible]
155062002712	[illegible]
396462003782	[illegible]
409162001072	[illegible]
409162004201	[illegible]
728462000527	[illegible]
728462000961	[illegible]
459062000529	[illegible]
617962026335	[illegible]
190862011513	[illegible]
620362020694	[illegible]
620362020718	[illegible]
251062001648	[illegible]
610762016239	[illegible]
211662005799	[illegible]
463662000872	[illegible]
300162009654	[illegible]
304162005307	[illegible]
618462023088	[illegible]
396562005269	[illegible]
284062018716	[illegible]
616162014069	[illegible]
616162014105	[illegible]
616162014152	[illegible]
616162014419	[illegible]
616162014527	[illegible]
396962007326	[illegible]

நாள்: 03.05.2025

ஒப்/- அதிகாரப்பூர்வ அதிகாரி, ஐசிஐசிஐ வங்கி லிமிடெட்டுக்காக.

இந்து சமய அறநிலையத்துறை

அருள்மிகு வாழைத்தோட்டத்து அய்யன் திருக்கோயில்.

அய்யம்பாளையம், பல்லடம் வட்டம், திருப்பூர் மாவட்டம்

தொலைபேசி : 0421-6694469 Email:ayyantemple@gmail.com

ந.க.எண்.99/2025/அ2. நாள் : 02.05.2025

மறுபொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி திறப்பு அறிவிப்பு பசலி 1435

திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், அய்யம்பாளையம் அருள்மிகு வாழைத்தோட்டத்து அய்யன் திருக்கோயில் வளாகத்தில் திருக்கோயில் நிர்வாகத்தால் ஒதுக்கீடு செய்யும் இடத்தில் 1.திருக்கோயில் இடத்தில் தேங்காய் பழக்கடை வைத்து நடத்தும் உரிமம், 2.பொரி கடலைக்கடை வைத்து நடத்தும் உரிமம், 3.அழகு சாதனப் பொருட்கள் மற்றும் விளையாட்டுப் பொருட்கள் வைத்து விற்பனை செய்யும் உரிமம், 4.குளிர்பானங்கள், பேக்கரி ஸ்டால் மற்றும் சைவ உணவு விடுதிவைத்து நடத்தும் உரிமம் 5.பிரசாதம் தயார் செய்து விற்பனை செய்யும் உரிமம், 6.திருக்கோயிலுக்கு உபயமாக வரும் ஆடு, கோழி சேவல் எடுத்துக்கொள்ளும் உரிமம், 7.பூக்கடை வைத்து விற்பனை செய்யும் உரிமம், 8.முடிக்கொட்டகையில் பக்தர்கள் காணிக்கையாக செலுத்தும் முடிகளை சேகரித்துக் கொள்ளும் உரிமம், 9.பக்தி கேசட், பக்தி புத்தகம் சாமி படங்கள் வைத்து விற்பனை செய்யும் உரிமம் பசலி 1435-க்கு (01.07.2025 முதல் 30.06.2025 முடிய) மறு பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி திறப்பு 21.05.2025 அன்று முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறும். ஒப்பந்தப்புள்ளி படிவம் 06.05.2025 முதல் 20.05.2025 முடிய திருக்கோயில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவம் கொடுக்க வேண்டிய கடைசி நாள் 21.05.2025 முற்பகல் 11.00 மணி வரை. மறு பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி திறப்பு தொடர்பான அனைத்து விவரங்கள் மற்றும் நிபந்தனைகளை திருக்கோயில் அலுவலகத்தில் அலுவலக வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் நேரில் கேட்டுத்தெரிந்து கொள்ளலாம்.

இரா.இளையராஜா — உதவி ஆணையர்/செயல் அலுவலர்(கூ.பொ)

இரா.மேனகா — தக்கார்/துணை ஆணையர்/செயல் அலுவலர்

இடம் : அய்யம்பாளையம் ; நாள் : 02.05.2025

வெ.ஆ.எண்: 109/2025, செ.ம.தொ.அ/2025/திருப்பூர் 02.05.2025

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம். சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

TATA

டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

பதிவு முகவரி: 11ஆவது தளம், டவர் A, பெனின்சுலா பிசினஸ் பார்க், கணபத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை – 400013. கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், # 6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை – 600 024.

அசையாச் சொத்து விற்பனை அறிவிப்பு

(கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 8(6) மற்றும் விதி 9(1) கீழ்)

... 20–05–2025 நாளில் பிற்பகல் 2.00 மணிக்கு மின்–ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும். ... 19–05–2025 அன்று மாலை 5.00 மணி வரை ... [illegible]

வ. எண்	கடன் கணக்கு எண்	கடன்தாரர்(கள்) / உப-கடன்தாரர்(கள்) / சட்டப்பூர்வ வாரிசு(கள்) / சட்டப்பூர்வ பிரதிநிதி / ஜாமீன்தாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பின்படி தொகை	நிர்ணய விலை	முன்வைப்புத் தொகை	சுவாதீன வகை	தேதிப்படி நிலுவைத் தொகை
2.	TCHHL0806000100102537 & TCHIN0806000100102845	திரு. கார்த்திக் A, Ms. ராஜாமணி A	TCHHL0806000100102537 என்ற ஒப்பந்த எண்ணின்படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.7,37,432/– மற்றும் TCHIN0806000100102845 என்ற ஒப்பந்த எண்ணின்படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.55,110/– மொத்தம் ரூ.7,92,542/– மற்றும் 12–09–2024	ரூ.6,40,000/–	ரூ.64,000/–	கைவச	TCHIN0806000100102845 என்ற ஒப்பந்த எண்ணின்படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.64307/– மற்றும் TCHHL0806000100102537 என்ற ஒப்பந்த எண்ணின்படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.834210/– மொத்தம் ரூ.898517/– மற்றும் 25.04.2025
3.	TCHHL0806000100202381 & TCHHF0806000100202437 & TCHIN0806000100203019 & TCHIN0479000100301848	திரு. விஸ்வநாதன் M, MS. தீபா S	TCHHF0806000100202437 என்ற ஒப்பந்த எண்ணின்படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.11,18,319/– மற்றும் TCHHL0806000100202381 என்ற ஒப்பந்த எண்ணின்படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.26,62,416/– மற்றும் TCHIN0806000100203019 என்ற ஒப்பந்த எண்ணின்படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.1,61,455/– மற்றும் TCHIN0479000100301848 என்ற ஒப்பந்த எண்ணின்படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.4,35,853/– மற்றும் மொத்தம் ரூ.43,78,043/– மற்றும் 06–09–2024	ரூ.35,00,000/–	ரூ.3,50,000/–	கைவச	TCHIN0479000100301848 என்ற ஒப்பந்த எண்ணின்படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.488414/– மற்றும் TCHHF0806000100202437 என்ற ஒப்பந்த எண்ணின்படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.1233312/– மற்றும் TCHIN0806000100203019 என்ற ஒப்பந்த எண்ணின்படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.183317/– மற்றும் TCHHL0806000100202381 என்ற ஒப்பந்த எண்ணின்படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.2937001/– மற்றும் மொத்தம் ரூ.4842044/– மற்றும் 25–04–2025

... மின்–ஏலம் ஆனது https://bankauctions.in/ வலைதளம் மூலம் 20–05–2025 அன்று பிற்பகல் 2.00 மணி முதல் 3.00 மணிக்குள் ... info@bankauctions.in ... Manish.Bansal@tatacapital.com ... 8588983696 ... 9999078669 ... https://www.tatacapital.com/property-disposal.html [illegible]

இடம்: தமிழ்நாடு, நாள்: 03.05.2025

ஒப்/- அதிகாரப்பூர்வ அதிகாரி, டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிட்.

நிடோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட் (nido)

முன்னதாக எடெல்வீஸ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆக அறியப்பட்டது பதிவு அலுவலகம் அமைந்துள்ள இடம்: டவர் 3, 5-வது தளம், விங் 'B', கோஹினூர் சிட்டி மால், கோஹினூர் சிட்டி, கிரால் சாலை, குர்லா (மேற்கு), மும்பை – 400 070. பிராந்திய அலுவலகம்: எண் 19, 7வது தளம், கோச்சார் டவர்ஸ், வெங்கட்நாராயணா சாலை, தி.நகர், சென்னை – 600017.

சர்ஃபாசி சட்டம், 2002-ன் விதி 8(1) கீழ் சுவாதீன அறிவிப்பு

[illegible]

கடன் கணக்கு எண்: LCMBLAP0000041722, கடன் ஒப்பந்த தேதி: 16.03.2018, கடன் தொகை: ரூ.5,25,00,000/– ... கோரிக்கை அறிவிப்பு தேதி: 20.02.2025 NPA தேதி: 04.02.2025 ... அடையாளப்பூர்வ/ஆக்கப்பூர்வ சுவாதீனம் தேதி: 29–04–2025

இடம்: தமிழ்நாடு, தேதி: 03.05.2025

pnb Housing Finance Limited

பிற்சேர்க்கை-IV-A – அசையாச் சொத்து/க்களின் மின்-ஏல-பொது விற்பனை அறிவிப்பு

கிளை அலுவலகம்: கோயம்புத்தூர்: PNB ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட், 1112, ராஜா பிளாசா, 2ஆவது தளம், லக்ஷ்மி மில் சந்திப்பு, கோயம்புத்தூர் - 641037.

கடன் எண் / கடன்தாரர் / ஜாமீன்தாரர் (A)	கோரப்பட்ட தொகை மற்றும் தேதி (B)	சுவாதீன வகை (C)	அடகு வைக்கப்பட்டுள்ள சொத்துக்களின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத் தொகை (F)	விண்ணப்பம் சமர்ப்பிக்கும் கடைசி தேதி (G)	ஏலத்தொகை உயர்வு (H)	ஆய்வு தேதி மற்றும் நேரம் (I)	ஏல தேதி மற்றும் நேரம் (J)	(K)
HOU/COI/0323/1098531 D ராஜ்குமார் / ரேவதி கி.அ: கோயம்புத்தூர்	RS. 1573157.44 04-06-2024	கைவச சுவாதீனம்	SF எண் 285/2A, மனை இட எண் 22, ... கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா, 641019.	RS. 1537000	RS. 153700	26-05-2025	RS.10 Thousand	14-05-2025, 11AM to 5 PM	27-05-2025, 02PM to 03PM	[illegible]
HOU/COI/0715/230042 [illegible] கி.அ:கோயம்புத்தூர்	RS. 711249.08 15-06-2022	கைவச சுவாதீனம்	SF எண் 300, எண் 37, ... கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா, 641201.	RS. 534000	RS. 53400	26-05-2025	RS.10 Thousand	14-05-2025, 11AM to 5 PM	27-05-2025, 02PM to 03PM	[illegible]

[illegible]

இடம்: கோயம்புத்தூர், தேதி: 03.05.2025

ஒப்/- அதிகாரப்பூர்வ அலுவலர், PNB ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்